19.12.2024 எம்.சி.ஓ.பி. எண். 115/2021 ம.சா.1 முருகன்

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

கலவை செல்லும் வழியில் அகரம் அருகே விபத்து நடந்தது. 16 ஆம் தேதி டிசம்பர் மாதம் விபத்து நடந்தது. நான் என்னுடைய வேலையை முடித்துவிட்டு வீட்டிற்கு சென்று கொண்டிருந்தேன். நான் சென்ற வாகனத்தில் ராஜேஷ் என்பவரும் வந்தார். நான் தான் வண்டியை ஓட்டிவந்தேன். ராஜேஷ் பின்னால் உட்கார்ந்து வந்தார். எனக்கு படிக்க தெரியாது. ம.சா.ஆ.7ல் ராஜேஷ் தான் வண்டியை ஓட்டிவந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் தான் ஒட்டிவந்தேன். ம.சா.ஆ.7ல் ராஜேஷ் தான் வண்டியை ஓட்டிவந்ததாக தெளிவாக கூறியுள்ளார் என்றும் தற்போது வழக்கிற்காக நான் வண்டியை ஓட்டிவந்ததாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ராஜேஷிற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை அதனால் தான் வண்டியை நான் ஓட்டியவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதன்காரணமாக தான் வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்ப காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையை படித்து பார்த்தேன். 1ம் எதிர்மனுதாரர் அவருடைய டிராக்டரை ஸ்ரீ ஆண்டவர் பைனான்ஸில் அடமானம் போட்டுள்ளதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். மேற்சொன்ன பைனான்ஸ் நிறுவனத்தை தரப்பினராக சேர்க்கவில்லை. 1ம் எதிர்மனுதாரர் காப்பீட்டிற்கான தொகையை பைனான்ஸ் நிறுவனத்திற்கு செலுத்திவிட்டார் என்றும் இம்மனுவிற்கு பைனான்ஸ் நிறுவனமும் அவசியமான தரப்பினர் என்றும் அவசியமான தரப்பினரை தரப்பினராக சேர்க்காததால் மனு பாதிக்கப்படுகிறது என்றால் சரியல்ல. நான் கடையில் வேலை செய்துவருகிறேன் என்பதற்கு அடையாள அட்டையும், வருமானம் சம்மந்தமான ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் செய்துள்ளேன். நான் கடையில்

வேலை செய்துவருகிறேன் என்பதற்கு அடையாள அட்டையும், வருமானம் சம்மந்தமான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றும் தாக்கல் செய்துள்ளதாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ராஜேஷிற்கு மது அருந்தும் பழக்கம் இல்லை. ராஜேஷ் மது அருந்தியிருந்தார் என்றும் விபத்து ராஜேஷ் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மனு 1ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை.